1974 மார்ச் 13]

மேட்டுப்பாளையம் பகுதியில் மணவிழா மண்டபம்.

*410 வின :--திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சேர்ந்த வனபத்ரகாளி கோவிலில் மணவிழா மண்டபம் அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த உதவிப் பொறியாளர், இப்பணிக்கான மதிப்பீட்டைத் தயாரிக்குமாறு பணிக்கப்பெற்றுள்ளார். மதிப்பீடு கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப் பெறும்.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியிலே வனபத்ரகாளி அம்மன் கோவில் பவானி ஆற்றின் கரையிலே மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. எல்லா பகுதிகளிலிருந்தும் மக்கள் அக்கோவிலுக்கு திரண்டு வருகிறார்கள். அங்கு மணவிழா மண்டபம் கட்டவேண்டுமென்ற அம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை இந்த ஆண்டாவது நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டவுடன் உடனடியாக வேலை தொடங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Tamil medium students in Colleges

*** 391. *Q* —Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of students in Tamil medium classes in colleges in Tamil Nadu who have been paid incentive money for the academic year 1973–74 ?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1973–74-ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழி வகுப்புகளில் கற்று வருகின்ற 30,058 மாணவர்கட்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை கொடுப்பதற்குப் பதிலாக, ஆங்கில மீடியத்திலே படிப்பவர்களுக்கு உத்தியோகச் சலுகை அதிகமாக இருக்கிற காரணத்தினால்,